சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**அசல் வழக்கு எண்.108/2022**

வாதி தரப்பு சாட்சி வா.சா.3 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. K. ரெஜினா, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர்: | திருமதி. ஜெனிபா | த/பெ: செல்வராஜ் |
| வயது: | | ஊர் : |
| தொழில்: | | முகவரி: |
| தேதி: | 03.12.2025 | |

முதல் விசாரணை…

நான் தற்போது திருவாரூர் நில அளவை துறையில் சார்பாய்வாளராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததன் பேரில் சாட்சியமளிக்கிறேன். தாவா சொத்தை நீதிமன்ற உத்தரவுபடி நன்னிலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நான் பணியாற்றிய போது நான் தான் அளவீடு செய்தேன். தாவா சொத்தின் மொத்த பரப்பு 7 ஏர்ஸ் ஆகும். ( 700 சதுர மீட்டர்). சதானந்தம் பெயரில் புல எண்.143/3A1 நிலம் 255 சதுர மீட்டர் இருந்தது. சரவணன் பெயரில் புல எண் 143/3 ஏ 2 நிலம் 445 சதுர மீட்டர் இருந்தது. ஆனால் புல எண் 143/1 ஏ 1ல் சதானந்தம் அனுபவத்தில் 50 சதுர மீட்டர் மட்டுமே இருந்தது. மேலும் சதானந்தம் அனுபவத்தில் புல எண் 143/3A நிலத்தில் 25 சதுர மீட்டர் அனுபவத்தில் இருந்தது. சதானந்தம், சரவணன் இருவர் பெயரிலும் புல வரைபட அளவின் படி 700 சதுர மீட்டர் இருந்தது. ஆனால் பூஸ்துதியில் 700 சதுர மீட்டர் நிலம் இல்லை. உட்பிரிவு எதனடிப்படையில் செய்யப்பட்டது என்பதற்கான ஆவணம் கொடுக்கப்படவில்லை.

**குறுக்கு விசாரணை**

நான் நீதிமன்ற உத்தரவு படி வருவாய் துறை ஆவணங்களில் உள்ள அளவுகளின்படிதான் அளவீடு செய்தேனா என்றால் ஆமாம். புல எண் 143/3A

மொத்த விஸ்தீரணம் 7 ஏர்ஸ் ஆகும். புல எண் 143/3A1 ன் விஸ்தீரணம் 255 சதுர மீட்டர் ஆகும் அது சதானந்தம் பெயரில் உள்ளது. சரவணன் பெயரில் புல எண் 143/3 ஏ 2 நிலம் 445 சதுர மீட்டர் இருந்தது. சரவணன் வீட்டிற்கு கிழக்கு புறம் சதானந்தத்திற்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது. சரவணன் வீட்டிற்கு கிழக்கு புறம் அகலம் 5 அடியும் நீளம் 25 மீட்டரும் சரவணன் இடம் சதானந்தம் அனுபவத்தில் உள்ளது. நான் அளவீடுகளை வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் அளவீடு செய்து அறிக்கை கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். சரவணன் வீட்டிற்கு மேல்புறம் உள்ள சர்வே கல்லில் இருந்து முறையாக அளக்கவில்லை என்றால் சரியல்ல. சரவணன் வீட்டிற்கு மேல்புறம் உள்ள சர்வே கல்லில் இருந்து அளந்தபோது அங்கு பிரச்னை ஏற்பட்டதால் சற்று தள்ளி பாத்திமாபீவிக்கு பாத்தியப்பட்ட நிலத்தையும் சேர்த்து அளந்தேன் என்றால் சரியல்ல. நான் முறையாக சர்வே கல்லிலிருந்து அளவீடு செய்திருந்தால் நான் கொடுத்த அறிக்கையில் சொல்லியுள்ளவாறு 25 சதுர மீட்டர் ஆக்கிரமிப்பு செயயப்பட்டதாக சொல்லியிருக்கமாட்டேன் என்றால் சரியல்ல. நான் முறையாக அளவீடு செய்யாததால் ஆணையருக்கு நான் கொடுத்த அறிக்கை ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.